**<u>18.12.2023  அ.வ.எண்.117/2015 பி.வா.சா.1, சேகர் த/பெ. பத்மராஜ்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாதிகள் நீர் இரைக்கும் கிணற்றிக்குரிய மின் கம்பத்தை சாய்த்துவிட்டு பியூஸ் கேரியரை தூக்கி எரிந்துவிட்டேன் என்றும் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் வாதிகளால் புகார் கொடுக்கப்பட்டது என்றும் சொன்னால் அந்த மின் கம்பம் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் இருந்தது அது குறித்து மின்சார வாரியத்திற்கும் தகவல் கொடுத்திருந்தேன் இதற்கு இடையில் மழையின் போது அந்த மின் கம்பம் தானே கீழே விழுந்துவிட்டது. மின் இணைப்பு பெட்டியை மட்டும் நான் எடுத்து வைத்திருந்தேன் காவல் நிலைய விசாரணையின் போது அதனை திருப்பி கொடுக்க சொன்னதால் அதனை வாதிகளிடமே கொடுத்துவிட்டேன். கிணற்றில் வாதிகள்தான் நீர் இரைக்கின்றனர் என்றால் இல்லை நான் தான் நீர் இரைத்து பயிர் வைக்கிறேன். புதிய மின் கம்பத்தை யார் செலவு செய்து வைத்தது என கேட்டால் மின்சார வாரியமே புதிய மின்கம்பத்தை அமைத்தார்கள். நான் சொல்வது பொய் என்றும் வாதிகள்தான் புதிய மின் கம்பம் அமைக்க ரூ.11,000/- கட்டணம் செலுத்தினர் என்றால் அது சரியல்ல. மின் கம்பம் அமைத்து மின் இணைப்பை புதுப்பிக்க வாதிகள் மொத்தமாக ரூ.20,000/- செலவு செய்தனர் என்றால் அது சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பது சரியல்ல.